නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන,
පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යාංශය
மாநில திறன் மேம்பாடு, தொழிற்கல்வி,
ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சகம்
State Ministry of Skills Development,
Vocational Education, Research & Innovations

ජාතික ආධුනිකත්ව සහ කාර්මික පුහුණු කිරීම් අධිකාරිය
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
National Apprentice & Industrial Training Authority

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT
2021



971. ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, වැලිකඩ, රාජගිරිය.
971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,வெலிக்கடை, இராஜகிரிய.
971, Sri Jayawardanapura Mawatha, Welikada, Rajagiriya



தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

வருடாந்த அறிக்கை

2021

உள்ளடக்கம்

தலைவரின் செய்தி	01
நூன்முகம்	03
தூர நோக்கும் பணிக்கூற்றும்	04
அதிகாரசபையின் நோக்கங்கள்	05
அதிகாரசபையின் பிரதான பணிகள்	05
அறிமுகம்	06
2021.....	08
நிறுவனத் தகவல்கள்	13
முகாமைத்துவச் சபை	15
பணிப்பாளர் சபை அதிகாரிகள்	18
மாவட்ட முகாமையாளர்கள்	19
நிர்வாகக் கட்டமைப்பு	20
பயிற்றுவிக்கும் முறை மற்றும் ஏனைய பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள்	21
தரவு வெளிப்படுத்தலும் ஆய்வும்	25
2022 ஆம் ஆண்டுக்கான இலக்குகள்	53
இறுதி கணக்கறிக்கை	54
தணிக்கையாளர் நாயகத்தின் அறிக்கை	64

தலைவரின் செய்தி.....



தேசிய பயிலுநர் சபையாக 1971 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்கங் கொண்ட பயிலுநர் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு மீண்டும் 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கங் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையாக பெயரிடப்பட்டு, மேலும் எமது அதிகாரசபையானது தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சிறப்பாக புரிந்து கொண்டு கைத்தொழிற் பயிற்சித் துறையில் பாரியதொரு பணியை நிறைவேற்றுவதற்காக உயர்ந்த இடத்தில் திகழ்வதினை மனப்பூர்வமாகவும் களிப்புடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதாரத்திற்குத் தேவையான திறமையான இளம் தலைமுறையை உருவாக்குவதே எமது நிறுவனத்தின் பிரதான நோக்கமும் அபிலாசையுமாகும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள வேலையற்ற 100,000 இளைஞர் யுவதிகளை திறன்மிக்கவர்களாக உருவாக்கி அவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதற்கு பயிலுநர் பயிற்சியை வழங்குதலானது, கடந்த 50 வருட காலமாக எமது அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட பாரிய சவாலாக காணப்படும் பணியாக இதனைக் குறிப்பிடலாம். அங்கு பல்நோக்கு அபிவிருத்திப் பணிக்குழுவுடன் இணைந்து தொழிலற்றோர் மற்றும் பாடசாலையிலிருந்து இடைவிலகிச் சென்ற இளம் தலைமுறையினர் தொழிலைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதும், சுகாதாரப் பிரிவினை வலுவூட்டும் நோக்கத்துடன் தாதியர்களுக்காக INHCT (Institute of Nursing & Health Care Training) என்ற பெயரில் பயிற்சி மத்திய நிலையமொன்றை ஆரம்பிப்பதும் அதனூடாக அவர்களை வலுவூட்டுவதும் எமது முதன்மைக் குறிக்கோளாகும்.

அத்தோடு நின்றுவிடாது பாடசாலையிலிருந்து இடைவிலகிச் சென்ற மாணவர்களை இலக்காகக் கொண்டு பல்வேறு தொழிற் துறைகளில் புகுவதற்கான புதிய வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் பொருட்டு பல்வகை தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கிராமிய மற்றும் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டன. அதன்படி தொடர்ந்து 13 வருட காலமாக கல்வி நிகழ்ச்சித் திட்டம் எனும் பெயரில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவ மாணவியர்களை இலக்காகக் கொண்டு அவர்களுக்குத் தொழிற் பயிற்சியை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்டது. அத்தோடு இலங்கையில் உள்ள பெரும்பாலான பிரதேசங்கள் எதிர்கொள்ளும் பாரிய சவாலாகக் காணப்படும் யானை-மனித பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்காக காட்டு யானைகளுக்கான வேலிகளை முறையாகவும், உரிய முறையிலும் பராமரிப்பு செய்வதற்காக "யானைகளுக்கான வேலிகளை பராமரிக்கும் உதவியாளர்களுக்கு" பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதனூடாக தொழிலற்ற இளம் தலைமுறையினருக்குப் புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதோடு அவர்களை பல்வகை தேர்ச்சி மிக்கவர்களாக உருவாக்குவதற்கும், அத்தோடு இதன்மூலம் வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் போன்ற பிரிவுகளில் கவனத்தைச் செலுத்துவதற்கும் முடியுமாதல்.

சௌபாக்கியத்தின் இலக்கினை நோக்கிச் செல்லும் இலங்கையின் புதிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் பொருட்டு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் செயற்பாடுகளின் பெறுபேற்றினை 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை மூலம் விவரித்து காட்ட முடியும்.

மிகவும் போட்டிகரமான சூழலில் மற்றும் கொரோனா பெருந்தொற்று நிலைமையில் பல்வேறு இன்னல்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு அதிகார சபையின் நோக்கங்களையும், பொறுப்புக்களையும் எமது பணிக்குழுவின் அயராத அர்ப்பணிப்பின் மூலம் நிறைவேற்றிக்

கொள்ள முடிந்தது.

மேற்படி சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு நிறுவனத்தின் அபிமானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்கிய பணிக்குழுவினர் அனைவருக்கும் எமது பயிலுநர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி பல்வேறு வகையில் ஒத்துழைப்பு வழங்கிய அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதற்கான சிறந்த தருணமாக இதனைக் கருதுகிறேன்.

தரங்க நளீன் கம்லத்
தலைவர்

நூன்முகம்

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் ஆண்டறிக்கை தயாரிக்க வேண்டியுள்ளது.

இந்த அறிக்கையில் 03 பாகங்கள் உள்ளடங்குகின்றன. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான விபரங்கள், பயிற்சி குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஆண்டின் சுருக்கமான வருடாந்த கணக்கு அறிக்கையும் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள தகவல்களை உள்ளடக்கியும் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையானது நாடுபூராகவும் இயங்கும் 25 மாவட்ட அலுவலகங்களின் முகாமையாளர்கள் மற்றும் தேசிய நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்கள் அத்துடன் பிரதான அலுவலகத்தில் அந்தந்த பிரிவுகளின் தலைவர்களினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்து சுருக்கமான முறையில் இவ்வறிக்கையானது தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

2021

எமது நோக்கு

மனித வள அபிவிருத்தியின் ஊடாக, இலங்கை செழுமையை அடைவதற்கு, தாக்கமுள்ள பங்களிப்பினைச் செய்து அதி திறன் பயிற்சியினை வழங்கும் அமைப்பாக உருபெறுதல

எமது ஏற்புப் பணி

கைத்தொழிற் துறையிலான தேர்ச்சி பெற்ற மனிதவலுத் தேவைக்கு முகம் கொடுக்கும் வகையில், உயர்ந்த தொழிற்சார் நியமங்களுடனான, நன்றே உருவாக்கப்பட்ட தேர்ச்சிகளை தன்னகத்தே கொள்வதற்காய், இளம் பராயத்தினருக்கு வாழ்தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல

அதிகாரசபையின் நோக்கங்கள்

தாபிப்புச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்கப் பந்தியின் பிரகாரம் இந்த அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன.

(அ) தொழிற் பயிற்சிகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் வழங்குதல்.

(ஆ) தொழிற் பயிற்சிக்குரிய நியமங்களை நிர்ணயித்தல்.

(இ) தொழிற் பயிற்சிக்குரிய பரீட்சைகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் ஏனைய மானியங்களை வழங்குதல்.

(ஈ) தேசிய தொழினுட்பவியலாளர் பரீட்சையை நடாத்துதல்.

(உ) தொழிற் பயிற்சி குறித்த ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ஊ) பல்வேறான திறன்களை மேம்படுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான போட்டிகளை நடாத்துதல்.

(எ) தொழிற் பயிற்சியை வழங்கும் நிறுவனங்களினதும் ஏனைய நிறுவனங்களினதும் பயிற்சி வழங்கும் திறன்களை அபிவிருத்தி செய்தல்.

(ஏ) தொழிற் பயிற்சி தொடர்பில் தொழிற் பயிற்சி ஆணைக்குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

(ஐ) சம நோக்கங்களையுடைய இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அமைந்துள்ள நிறுவனங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்களை டிப்ளோமா மற்றும் பட்டதாரி ஆகியவற்றை சமமான தரங்களாக கருதுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

அதிகாரசபையின் பிரதான பணிகள்/ நிகழ்ச்சித் திட்டங்கள்

(அ) அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சிகளை வழங்குதல், 04 தேசிய நிறுவனங்கள் மற்றும் நாடுபூராகவும் அமையப்பெற்றுள்ள பயிலுநர் பயிற்சி நிலையங்களின் மூலமாக இரட்டை நிலைப் பயிற்சிகளை வழங்குதல்.

(ஆ) ஏனைய தொழிற் பயிற்சி பெறுவோரை வெவ்வேறான நிறுவனங்களுக்கு அனுப்பி பணிப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.

(இ) மொறட்டுவை, பேராதெனிய மற்றும் றுகுணு பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கும் ஏனைய டிப்ளோமா மாணவர்களுக்கும் தேவையான எந்திரவியல் பயிற்சிகளை வழங்குதல்.

(ஈ) முறைசாரா அடிப்படையில் திறன்களை பெற்றுள்ள கைத்தொழில் வினைஞர்களுக்கு முன் மதிப்பீட்டு முறைக்குத் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் வழங்குதல், தொழிலுக்கு ஏற்ற வகையில் தகைமைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் தேவையான தேசிய தொழில் பரீட்சைகளை நடாத்துதல்.

(உ) தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல்.

(ஊ) பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு இடைவிலகியோர் மற்றும் ஏனைய இலக்குக் குழுக்களுக்குத் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

அறிமுகம்

சட்ட கட்டமைப்பு

1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய பயிலுநர் சபையாக ஆரம்பிக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாக நிறுவப்பட்டது.

தனது கருமங்களைச் செவ்வனே நிறைவேற்றிய பெருமையுடன் 50 ஆவது வருடத்தினைக் கடந்த நாம் 1971 முதல் 2021 ஆம் ஆண்டு வரை தொழிற் பயிற்சி வழங்கும் துறையில் பயணித்த பயணத்திற்கு அதிக வலுவூட்டிய உறுப்பினர்கள் தொடர்பாகவும் சற்று குறிப்பிட விரும்புகின்றோம்.

1. பயிற்சிப் பிரிவு

ஆட்சேர்ப்புப் பிரிவு, பயிற்சிப் பிரிவு, இயந்திரவியல் பயிற்சிப் பிரிவு, தொழில் வழிகாட்டல் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் கூடிய பயிற்சிப் பிரிவானது 25 மாவட்டங்கள் ஊடாக முழு இலங்கைக்கும் பயிற்சி நடவடிக்கைகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல், தொடர்புபடுத்தல் மற்றும் பேணுதல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு சக்தியளித்து வருகின்றது.

2. தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு

பாடத்திட்ட அபிவிருத்திப் பிரிவு, தர முகாமைத்துவ பிரிவு, தேசிய தொழிற் பரீட்சைப் பிரிவு, தேசிய தொழிற் தகைமைப் பிரிவு, மதிப்பீட்டுப் பிரிவு, சான்றிதழ் பிரிவு ஆகிய பிரதான பிரிவுகளுடன் கூடிய தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் பயிற்சி நடவடிக்கைகளை மிகவும் முறையாகவும் செயற்றிறனுடனும் நடாத்துவதற்குத் தேவையான வளங்களை அபிவிருத்தி செய்து, பயிலுநர்களினதும் நிறுவனத்தினதும் தரத்தினை விருத்தி செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை வழங்கி அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பாரிய சக்தியை வழங்குகின்றது.

3. திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பிரிவு

சகல மாவட்ட அலுவலகங்கள், தேசிய நிறுவனங்கள், நிர்வாகம், தரக்கட்டுப்பாடு, நிதி மற்றும் பயிற்சி ஆகிய சகல பிரிவுகளையும் உள்ளடக்கி அவர்களது முன்னேற்றத்தை தரவு முகாமைத்துவ செயன்முறை மற்றும் தேவைக்கேற்றவாறு ஏனைய அறிக்கைகளைத் தயாரித்து நிரல் அமைச்சு உள்ளடங்கலாக ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கேற்றவாறு தகவல்களை வழங்கி தேசிய பயிலுநர் தொழிற் பயிற்சி அதிகாரசபையானது, வெளிச்சூழலுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

மேலும், அதிகாரசபையின் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக தேவையான ஒருங்கிணைந்த திட்டம், செயற்பாட்டுத் திட்டம் மற்றும் தேவைக்கேற்றவாறு பல வழிகளில் திட்டங்களை மேற்கொள்ளல் ஆகியன பிரதான பொறுப்பாகும். அதேபோன்று அதிகாரசபையின் பயிற்சி மற்றும் பயிற்சி தொடர்பான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு இப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. மேலும் பயிற்சிக்கான சகல தகவல்களையும், பணியாளர்களின் தகவல்களையும் ஒன்றிணைப்பதற்கான முகாமைத்துவ தகவல் முறைமையை தயாரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்ற செயற்பாடுகள் இப் பிரிவின் பிரதான வகிபாகமாகும்.

4. நிர்வாகப் பிரிவு

அலுவலர்களை ஆட்சேர்த்தல் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு பிரிவு, சட்டப் பிரிவு, அலுவலர் பயிற்சிப் பிரிவு ஆகிய பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதுடன், ஆளணி மற்றும் ஏனைய பௌதீக வளங்களை வினைத்திறனுடன் நிர்வாகம் செய்தல் மற்றும் பயன்படுத்தல் மூலமாக நிறுவனத்தின் எதிர்காலப் பயணத்திற்கு பரந்த வலுவூட்டலை அளிக்கின்றது.

5. நிதிப் பிரிவு

பெறுகைகள் பிரிவு, களஞ்சியப் பிரிவு, கொடுப்பனவுப் பிரிவு, சம்பளப் பிரிவு மற்றும் கணக்கு வைத்தல் பிரிவு ஆகிய பிரதான பிரிவுகளை உள்ளடக்குவதுடன், வருடாந்த திட்டமிடல் பிரிவின் மூலம் தயாரிக்கப்படும் செயற்பாட்டு மற்றும் கூட்டுத் திட்டத்தின் படி தயாரிக்கப்படும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினை முறையாக செயற்படுத்தி நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் நேரடித் இணைப்பொன்றை சேர்ப்பதற்குப் பிரதான பங்களிப்பை வகிக்கின்றது.

6. கணக்காய்வுப் பிரிவு

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு கணக்காய்வுத் திணைக்களம், நிரல் அமைச்சு உள்ளடங்களாக ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. உள்ளக நிர்வாகம் மற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகளின் வெளிப்பாட்டுத் தன்மையை முறையாக பராமரிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபையை ஒருங்கிணைத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு வேண்டிய தகவல்களை வழங்குவதுடனான பாரிய கருமமொன்றை நிறைவேற்றுகின்றது.

செயற்பாட்டு வழிமுறை

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கு உள்ள தத்துவங்களின் படி அச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்கங் கொண்ட பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குறிக்கோள்களின் உச்சத்தை அடைந்து கொள்வதற்காக சபையானது தமது செயற்பாட்டு வழிமுறையை நடைமுறைப்படுத்துகின்றது.

இதற்காக பயிற்சி என்ற கருப்பொருளுக்கமைய 04 தேசிய நிறுவனங்கள், 25 மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி தொடர்பான நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் தனியார் துறைகளின் உதவியுடன் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி வழங்கப்படுகின்றது.

பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு, கண்காணிப்பு, மேற்பார்வை, சான்றிதழ் அளிப்பு போன்ற பல்வேறு பிரிவுகளின் கீழ் நேரடியாக பயிற்சி செயற்பாட்டு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், ஊழியர் பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, நிதி மற்றும் கணக்காய்வு ஆகியனவும் உள்ளடங்கும்.

2021....


கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி	13,979
வேலையுடனான பயிற்சி	6,690
விசேட கைத்தொழில் பயிற்சி	5,439
நிலைய மைய பயிலுநர் பயிற்சி	2,905
நிலைய மைய பயிலுநர் பயிற்சி (பகுதி நேரம்)	393


2021 ஆம் ஆண்டாகும் போது அரை நூற்றாண்டினை அண்மித்த, அதாவது 50 வருட கால அபிமானமிக்கதோர் பயணப் பாதையை கொண்டிருக்கும் எமது தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையானது, நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்சியை வழங்குவதன் ஊடாக அவர்களின் எதிர்கால தொழிற் கனவை நனவாக்குவதற்காக, புதிய வழிமுறைகளை உருவாக்கிக் கொடுக்கும் கடமை பொறுப்பினை ஈடேற்றுகின்றது.

Covid-19 பெருந்தொற்று நிலைமையிலும் அனைத்து சவால்களுக்கும் வெற்றிகரமாக முகம்கொடுத்து, மனிதவள அபிவிருத்தியின் ஊடாக, அறிவுபூர்வமான பொருளாதார மையத்தைக் கட்டியெழுப்புவதைத் தமது பிரதான நோக்கங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு அதிமேதகு சனாதிபதி அவர்களின் சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தையும், அதற்கு சமமாக குறைந்த வருமானமுடைய 100,000 குடும்பங்களிற்குத் தொழில் வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு பல்நோக்கு அபிவிருத்தி பணிக்குழுவுடன் இணைந்து தொழிலை எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளுக்காக தொழிற்பயிற்சியை வழங்கும் விசேட பணியையும் 2021 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்ட பணிகளாக விவரித்துக் காட்டப்படுகின்றன.

NAITA SRI LANKA என்ற இணைய வானொலி அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டதோடு, அதன் ஊடாக பல்வேறு தொழில்களுக்கு விடயத்துடன் தொடர்புடைய குறிப்புகள் உள்ளடங்கிய கலந்துரையாடலுடன் கூடிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு செய்யப்படுகின்றன. அவ்வாறே பயிலுநர்களுக்காகத் தொழில் வழிகாட்டல் ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு அவ் வானொலி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் நிலவிய கொவிட் பெருந்தொற்று நிலைமையின் கீழ் பயிற்சி செயற்பாடுகளை தடையின்றி நடாத்திச் செல்வதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர்களுக்கு நிகழ்நிலை முறையின் ஊடாக 26 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்திச் செல்லப்பட்டது. இதற்காக மாவட்ட அலுவலகங்களிலும், 3 தேசிய நிறுவனங்களிலும் 3461 பயிலுநர்கள் பங்குபற்றியிருந்தனர்.





நாட்டில் நிலவிய கொவிட் பெருந்தொற்று நிலைமையின் கீழ் பயிற்சி செயற்பாடுகள் தடையின்றி நடாத்திச் செல்வதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர்களுக்கு நிகழ்நிலை முறையின் ஊடாக 26 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்திச் செல்லப்பட்டன. இதற்கு 3461 பயிலுநர்கள் மாவட்ட அலுவலகங்களிலும், 3 தேசிய நிறுவனங்களிலும் பங்குபற்றியிருந்தனர்.

சர்வதேச தரநிர்ணயமும் அங்கீகாரமும் கொண்ட திறமையான தொழில்நுட்ப வல்லுநர்களை (ளுஅயசவ வுநஉாழெஉசயவள) உருவாக்கும் அவசியத்தை மிகவும் வலியுறுத்தி காட்டுவதோடு, அரசாங்கத்தின் சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கைக்கு ஏற்புடையதாகும் வகையில் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறை இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய எமது அதிகார சபையினால் நவீனகரமான உபகரணங்களுடன் கூடிய முழுமையான கலைக்கூடமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் எமது அதிகார சபையின் கீழ் பயிற்சி பெறும் பயிலுநர்களுக்காக டிஜிட்டல் மூலமான கற்கை வளங்களை உருவாக்கும் வழிமுறையானது மிகவும் சிறப்பாக நவீன தொழில்நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கான ஆற்றல் கிடைக்கப் பெற்றுள்ளது. இதுவரையில் பல்வேறு தொழிற் துறைகளில் கற்புலன் கற்கை வளங்களை உருவாக்கியுள்ளதோடு, பயிலுநர்கள் அவற்றில் உரிய பயனையும் பெற்றுக் கொள்கின்றனர்.





அவ்வாறே, பயிலுநர்களுக்காக சிறந்த இரசணைகளுடன் கூடிய கல்வியை வழங்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட naitavoice இணைய வானொலியும் தற்போது 24 மணி நேரமும் இயங்கும் வானலைக் காலத்துடன் ஒலிபரப்பாவதோடு, நிரந்தர நேயர்கள் 500 பேரைக் கடந்துள்ளது. வானொலியை இடையூறின்றி இலகுவாக செவிமடுப்பதற்காக Android App ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

NAITA Sri Lanka

http://www.naitavoice.com/

அவ்வாறே, சௌபாக்கியத்தின் நோக்குக் கொள்கையின் கீழ் கல்வியில் டிஜிட்டல் கல்வி முறையை கொண்டுவரும் தொனிப்பொருளுக்கமைய தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் பயிலுநர் பயிற்சியைப் பெறும் மாணவர்களுக்காக அவர்களின் அறிவினை விருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பை வழங்குவதன் பொருட்டு நிர்மாணிக்கப்பட்ட நைட்டா டிஜிட்டல் கற்கை நிறுவகம் ஆரம்பிப்பதை அடையாளப்படுத்துவதற்காக ஹோட்டல் துறையில் ஆரம்ப கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் குழு கௌரவ அமைச்சரினால் நைட்டா டிஜிட்டல் கற்கை நிறுவகத்திற்காக டிஜிட்டல் வழிமுறையைப் பயன்படுத்தி பதிவு செய்தலானது மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறித்த நோக்கங்கள் மற்றும் சமூக மரியாதை கொண்ட சமூக வாழ்வொன்றை வாழும் புதிய திறன்களை கொண்ட தொழிற்படையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட தற்போதைய அரசாங்கத்தின் சௌபாக்கியத்தின் நோக்குக் கொள்கையின் படி கிராமத்திற்கு தொழில்நுட்பத்தைக் கொண்டு செல்லும் பிரதான நோக்கமாகும். நவீன தொழில்நுட்பத்தை கிராமத்திற்கு கொண்டு செல்வதற்காக கௌரவ இராஜாங்க அமைச்சரின் வழிகாட்டலின் படி திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நடமாடும் பயிற்சி கருத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதன் பொறுப்பாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் நிர்மாணப் பணியாக ஒரு இலட்சம் நடமாடும் பயிற்சி வழிமுறைகள் என அடையாளப்படுத்தப்படும் இந்த நடமாடும் கருத்திட்டத்தினால் நகர மற்றும் பகுதியளவிலான நகர்ப்புற பிரதேசங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நவீனகரமான தொழில்நுட்பத்தை தூர இடங்களுக்கு மெதுமெதுவாகக் கொண்டு சென்று பரந்த அளவில் சமூக மயப்படுத்துவதற்கான

வாய்ப்பொன்றாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் தொழிற் சந்தையுடன் இணையும் திறன்களுடன் கூடிய தொழிற்படைக்குப் புதிய தொழில்நுட்பத்துடன் போட்டியிட்டு தமது தொழில்களில் நீடித்து இருப்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தல், தொழில்நுட்பம்சார் தொழில்கள் குறித்து இளம் தரப்பினர் கவனத்தையும், ஈர்ப்பையும் பெற்றுக் கொள்ளலும், தேர்ச்சிச் சான்றிதழை வழங்குகையில் புதிய தொழில்நுட்பப் பகுதிகள் தொடர்பாக முறையான மதிப்பீட்டு வசதிகளை வழங்குதல், இந் நடமாடும் பயிற்சிக் கருத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். மேலும், தொழில்தருநர்களின் அறிவினை இற்றைப்படுத்துவதற்கும் முடியுமாதல், சேவை பெறுநர்களுக்குச் சிறந்த விளைதிறனான சேவையொன்றை வழங்க முடிதல், கிராமிய மக்களிடையே பொருளாதார அபிவிருத்தி உயர்வடைதல், நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான தொழில்நுட்ப அறிவு இடைவெளியைக் குறைத்தல் என்பன இதனூடாக அடையப்படும் பயன்களாகக் கூற முடியும்.





இலங்கை இராணுவப் படையின் பல்வேறு கடமை பொறுப்புக்களில் ஈடுபடும் இராணுவத்தினர் வினைதிறனான தொழிற்படையொன்றாக உருவாக்கும் தேசிய பணிக்கு உதவிய, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் அதன் ஆரம்ப கட்டத்தில் 800 பொறியியல் சேவைப்படையினர்களுக்காக ஐந்து மத்திய நிலையங்களில் NVQ-RPL மதிப்பீடு நடாத்தப்படுவதோடு, அதன்படி, அவர்களுக்குத் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட NVQ III ஆம் மட்டத்தின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





எமது அதிகார சபை மற்றும் எஸ் - லோன் நிறுவனம் ஒன்றிணைந்து சமூகத்தில் காணப்படும் திறன்களுடன் கூடிய, ஆயினும் உரிய முறையில் சான்றுப்படுத்தப்படாதவர்களாக இனங்காணப்பட்ட நீர்க்குழாய் பொருத்துனர்களுக்காக அவர்களின் தொழில்நுட்ப ஆற்றல் மற்றும் தொழில் அபிவிருத்தியை மேலும் முன்னேற்றுவதனை நோக்கமாகக் கொண்டு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இதனூடாக தொழிற்சந்தைக்குத் தேவைப்படும் திறன்களைக் கொண்ட மனிதவலு அபிவிருத்திக்கு உயர்ந்த பிரதிபலனை வழங்குவதோடு எதிர்காலத்தில் தனிநபர்களின் கௌரவம் மற்றும் சமூக நிலைமை மேலும் விருத்தி செய்யப்படும்.

தொழில்சார் பரீட்சைகளை ஒழுங்குபடுத்தல், நடாத்துதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் தேசிய தொழில்சார் பரீட்சைகளின் கீழ் (National Trade Testing - NTT) அல்லது தேசிய தொழில்சார் தகைமைகளின் கீழ் (National Vocational Qualifications - NVQ) மற்றும் முன் கற்கையை அங்கீகரித்தலும் (Recognition of Prior Learning - RPL) மேற்கொள்ளப்படும். இதன் கீழ் இனங்காணப்பட்ட 1000 நீர்க்குழாய் பொருத்துனர்களை வருடாந்தம் சான்றுறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பயிற்சி பெற்ற தாதிகள் மற்றும் துணை மருத்துவ பணிக்குழுவினரின் பற்றாக்குறை பெருமளவில் நிலவும் தனியார் பிரிவின் வைத்தியசாலைகள் மற்றும் தாதி இல்லங்களுக்காக வருடாந்தம் பணிக் குழுவிற்கு பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் எமது அதிகார சபைக்கும், தனியார் வைத்திய சாலைகள் மற்றும் மருத்துவ இல்லங்கள் (Nursing Home) (நிலைய சங்கத்திற்கும், தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபைக்கும் இடையே இப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்க முடியாத மற்றும் பாடசாலையை விட்டு இடை விலகியவர்களுக்குத் தொழிற்திறனை வழங்குவதற்கும் இது உறுதுணையாக அமையும். இதன்படி 950 தாதிகள் மற்றும் துணை மருத்துவ பணிக்குழுவினருக்கு வருடாந்தம் பயிற்சி வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.



தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் INSEE சீமெந்து கம்பனியும் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுதலானது அதிகார சபையின் தலைவரான தரங்க நளீன் கம்லத் அவர்களினதும் INSEE சீமெந்து கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் குஸ்டாவோ நவாரோ அவர்களின் தலைமையில் INSEE சீமெந்து கம்பனியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இவ் உடன்படிக்கையின் மூலம் காய்ச்சி இணைப்பவர்களுக்காக 1½ வருட காலமும் மின்னியலாளர்களுக்காக 1½ வருடகாலமும் என இரண்டு கற்கை நெறிகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.



சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் தொனிப்பொருளுக்கு அமைய தேர்ச்சியுடன் கூடிய திறன்விருத்தி மிக்கதோர் தேசத்தை கட்டியெழுப்புவதை முன்னோடியாகக் கொண்டு (SKILLS SRI LANKA) நிகழ்ச்சித் திட்டத்தை அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பங்குபற்றலுடன் திறன்விருத்தி தொழிற்கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"SKILLS SRI LANKA" கருத்திட்டத்தின் கீழ் தற்போது காணப்படும் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில்நுட்பத்தின் மூலம் விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு (Tech உதான) கருத்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டதோடு, அதற்கு சமாந்தரமாக தொழிற்கல்வி பயிற்சியைப் பெறும் பிள்ளைகளுக்கு மாதாந்தம் ரூ. 4000 புலமை பரிசில்களை வழங்குதல், நடமாடும் தொழிற்கல்வியை வலுவூட்டுவதற்கான கருத்திட்டத்தை ஆரம்பித்தல், தொழிற் பாதுகாப்பிற்காக அரச தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வுக்கு வருதல், தொழிற் பயிற்சியைப் பெறும் சகல மாணவர்களுக்காக இலவச பாதுகாப்பு ஆடைத் தொகுதி டுழுஎநசயடட முவைரூ என கருத்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன.

நாடுபூராகவும் பரந்து விரிந்துள்ள 40,000 மின்னியலாளர்களுக்கும் 10,000 நீர்க்குழாய் பொருத்துனர்களுக்கும் முன் அறிவு மதிப்பீட்டு முறையின் கீழ் (RPL) அவர்களின் தொழில் ஆற்றல்களை சான்றுப்படுத்தி தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழை (NVQ) வழங்குவதன் பொருட்டு எமது அதிகார சபையும், பொது பயன்பாட்டு ஆணைக்குழுவும், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கும் இடையில் முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.



அத்தோடு, உயர் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய மின்னஞ்சல் தொழில்நுட்பவியலாளர்களை வெளிநாட்டுத் தொழிற் சந்தைக்கு அனுப்புவதற்காக Huawei Lanka Technology நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்றும் கைச்சாத்திடப்பட்டது.



தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சியை வழங்கும் அதிகார சபையுடன் JAT Holdings நிறுவனமும் இணைந்து நாடுபூராகவும் பரந்துள்ள மரவேலைகள் கைவினைஞர்களுக்கு NVQ மட்டத்தில் சான்றிதழை வழங்குவதற்காக திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் கௌரவ சீதா அரம்பேபொல அவர்களின் தலைமையில் JAT Holdings கேட்போர் கூடத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை தமது 50 ஆவது வருடத்தின் பூர்த்தியை 2021.12.16 ஆம் திகதி கொண்டாடியது. 50 வருட காலமாக தேசியத்தின் பிள்ளைகளுக்காகப் பயிலுநர் பயிற்சியை வழங்கி அவர்களை திறன்மிக்கவர்களாக உள்ளூர், வெளியூர் தொழிற்படைக்கு அனுப்பும் உன்னதமான தேசிய செயற்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கியவாறு எமது நிறுவனம் கடந்து வந்த பாதையை கொண்டாடும் முகமாக நிகழ்ச்சித் திட்டங்கள் பல பிரதான அலுவலகத்தின் வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நிலவும் கொவிட் நிலைமை காரணமாக இவ் ஆண்டுநிறைவு விழாவை ஆடம்பரமின்றி, இருப்பினும் அபிமானத்துடன் கொண்டாடியது.


பிரதானமாக 25 தேர்களை வரவழைத்து தானம் வழங்கும் புண்ணிய நிகழ்வு நடைபெற்றதோடு, நைட்டாவின் 50 ஆவது வருடத்தினை அடையாளப்படுத்துவதற்காக நினைவுப் பலகையொன்றும் அதிகார சபையின் தலைவரான தரங்க நளீன் கம்லத் அவர்களின் கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. மாவட்ட முகாமையாளர்கள், பயிலுநர்கள் மற்றும் முயற்சியாளர்களை இணைத்துக் கொண்டு, நிறுவனத்தின் பல்வேறு சேவைகளையும் பணிகளையும் அறிமுகப்படுத்துதல் தொடர்பான நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்று காலை வேளையில் NAITA web வானலையின் ஊடாக ஒலிபரப்புச் செய்யப்பட்டது,







நிறுவனத்தின் தகவல்கள்



	தலைமையகம் இல 971, ஸ்ரீ ஜயவர்தன புர மாவத்தை, வெலிக்கடை இராஜகிரியா T.P. 011-2888782 - 7
01	**எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகம்** (IET) 18வது மைல் போஸ்ட், பௌத்த விகாரை வீதி, கட்டுநாயக்க T.P. 011-2252833
02	**கைத்தொழிற் பொறியியல் பயிற்சி நிறுவகம்** (IETI) இல. 581, காலி வீதி, கட்டுபெத்தை, மொரட்டுவை. T.P. 011-2647393, 011-2643847
03	**தன்னசைவு எந்திரவியற் பயிற்சி நிறுவகம்** (AETI) இல. 69-ஏ, பஸ்லைன் சாலை, ஒருகொடவத்த, வெல்லம்பிட்டிய. T.P. 011-2572977
	அம்பாறை மாவட்ட அலுவலகம் இலக்கம் 06, ஜி.எஸ். ஒழுங்கை, கல்முனைக்குடி 13, கல்முனை. T.P. 067-2229357
	அநுராதபுர மாவட்ட அலுவலகம் விமான நிலைய வீதி, அனுராதபுரம் T.P. 025-2223178
	பதுளை மாவட்ட அலுவலகம் இல. 4/10, மல்வத்த வீதி, பதுளுபிட்டிய, பதுளை. T.P. 055-2230644
	மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் இல. 16/1, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு. T.P. 065-2228130
	கொழும்பு மாவட்ட அலுவலகம் 242 ஹெவ்லொக் டவுன் வீதி, கொழும்பு 05 T.P. 011-2587258, 011-2597671
	காலி மாவட்ட அலுவலகம் இல. 395, வக்வெல்ல வீதி, ஜல்கஹா, காலி. T.P. 091-2235628
	கம்பஹா மாவட்ட அலுவலகம் இல. 61/5 மினுவங்கொட வீதி, கம்பஹா. T.P. 033-2232874
	அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் இல.39 பள்ளிக்குடாவ வீதி, தங்காலை. T.P. 047-2241512
	யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் இல 44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி - யாழ்ப்பாணம். T.P. 021-2222383
	களுத்துறை மாவட்ட அலுவலகம் 326/2, 3ம் மாடி, காலி வீதி, களுத்துறை தெற்கு. T.P. 034-2224239

	கண்டி மாவட்ட அலுவலகம் இல. 108/2 பீ, திவங்கபோதி மாவத்தை, கண்டி. T.P. 081-2201918
	கேகாலை மாவட்ட அலுவலகம் பண்டாரநாயக்க மாவத்தை, பல்லபான, கலிகமுவ நகரம். T.P. 035-2284931
	கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் ஏ9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி. T.P. 034-3942824
	குருணாகலை மாவட்ட அலுவலகம் நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ, குருணாகல் T.P. 037-2223789
	மாத்தறை மாவட்ட அலுவலகம் இல 27 ஏ, திறந்த பல்கலைக்கழக வீதி, நூபே, மாத்தறை T.P. 041-2226958
	மன்னார் மாவட்ட அலுவலகம் 952/1 நல்லாயர் வீதி மன்னார் T.P. 023-2223404
	மாத்தளை மாவட்ட அலுவலகம் இல.11, விகாரை வீதி, மண்தன்டவளை, மாத்தளை. T.P. 066-2223173
	மொனராகலை மாவட்ட அலுவலகம் பழைய கச்சேரிக் கட்டிடத் தொகுதி, மொணராகலை T.P. 055-2276504
	முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் மாங்குளம் வீதி முள்ளியவளை, முல்லைத்தீவு T.P. 021-2061012
	நுவரெலிய மாவட்ட அலுவலகம் இல: 116, கோவில் வீதி, ஹாவாஎலிய, நுவரெலியா. T.P. 052-2223702
	பொலன்னறுவை மாவட்ட அலுவலகம் இல:103, நீர்ப்பாசனப் பிரதேசம், புதிய நகரம், பொலநறுவை. T.P. 027-3223023
	புத்தளம் மாவட்ட அலுவலகம் மொலவத்தை, மெதகம வீதி, மாதம்பை. T.P. 032-2248250
	இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் 642, வித்தியாலய மாவத்தை, புதிய நகரம், இரத்தினபுரி. T.P. 045-2228667
	திருகோணமலை மாவட்ட அலுவலகம் இல.103/7, தபால் கந்தோர் வீதி, திருகோணமலை. T.P. 026-2226569
	வவுனியா மாவட்ட அலுவலகம் பூங்கா வீதி, வவுனியா. T.P. 024-2224679

02. நிர்வாகக் குழு

1. திரு. தரங்க நளீன் கம்லத், தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிமடை, இராஜகிரிய.	• Reading for, Doctor of Business Administration (2021/24) • Master of Business Studies (2015) • Bachelor of Commerce (2007) • Certifies Business Accountant (2015) • Certified Course in Computer Based Accounting
2. பேராசிரியர் மஹிந்த ரூபசிங்ஹ, பிரதி தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிமடை, இராஜகிரிய.	• PhD in Gemology and Geochemistry • MPhil in Geology and Mineralogy • BSc in Geology and Hydrogeology • German Language
3. திரு. ஜே.ஏ.டீ.ஜே.ஜயலத், (2021.03.25 வரை) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05	
பேராசிரியர் கே.ஏ. லலிததீர, (2021.04.30 வரை) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை கொழும்பு 05	• PhD, Degree in Economics (2017) • Master of Arts in Economics (2002) • Bachelor of Arts Special Degree in Economics (1993)
4. திருமதி எஸ்.பீ. ஸ்ரீயாகாந்தி (2021.11.05 வரை) கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் நிதி அமைச்சு செயலாளர் அலுவலகம், கொழும்பு 01	
திரு. எம்.ஏ.எஸ். மதுசங்க (2021.11.05 திகதியிலிருந்து) தேசிய நிதிக் கொள்கை திணைக்களம் திரைசேறி, நிதி அமைச்சு செயலாளர் அலுவலகம், கொழும்பு 01	• Postgraduate Diploma in Developing Economics • Postgraduate Diploma in Applied Statistics • Bachelor of Science • Diploma in Public Administration
5. திரு. ஹசித ஏக்கநாயக்க இல. 79/5, மொகஹமுல மெதமஹநுவர கண்டி	• BSc General Degree in Industrial Mathematics and Computer Sciences
6. திரு. மொஹமட் மிக்தாட் இல. 89/2, தெஹிவலை வீதி பெப்பிலியான பொரலஸ்கமுவ	• Bachelor of Business Administration (Special) (1993) • Completed Preliminary Examination Institute of Chartered Accountants of Sri Lanka

7. திரு. ஜானக கமல்கொட இல. 1361/2, பழைய கெஸ்பேவ வீதி, கங்கொடவில, நுகேகொடை	• Master of Business Studies (Merit) • Postgraduate Diploma in Education • Postgraduate Diploma in Counseling • Postgraduate Diploma in Business Management
8. திரு. எஸ்.கே.வை.ஜீ.எஸ்.கே. செனரத் இல. 309, கொழும்பு வீதி, கம்பஹா	• Attorney-at-Law • Diploma in Journalism • Diploma in Archaeological Heritage
9. திரு. எஸ்.ஏ.டீ. திலக் பிரேமலால், இல. 123/1ஏ, புகையிரத வீதி, கங்கொடவில, நுகேகொடை.	• Certificate Course in Quality Survey • Certificate Course in Construction Management for Technical Officers • G.C.E. (A/L) Examination
10. திரு. சஹன் டி சில்வா இல. 1009/18, 8 ஆம் ஒழுங்கை, சுமுது மாவத்தை, மாலம்பே.	
11. திரு. கிருஷான் சியம்பலாபிட்டிய, நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் வெளியேற்றம், துப்புரவு ஏற்பாட்டு இராஜாங்க அமைச்சு, 18 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி பத்தரமுல்லை	• Professional Qualification Human Resource Management (PQHRM) • Master of Business Administration • LLB Degree graduated in 2016
12. திரு. ஜே.சீ.கே. பஸ்நாயக்க (2021.01.27 வரை) இல. 2/ஏ/25, ஜயவடனகம, பத்தரமுல்லை.	
திரு. டப்.வீ.பீ. விஜேசிறி (2021.03.16 ஆம் திகதியிலிருந்து) இல. 03, சௌபாக்கிய உத்யானய, கொஹிலகொறட்டுவ வீதி, மகரகமை	• Certificate in Business Management • General Certificate in Education Advanced Level
13. திரு. கயான் மேனக திஸாநாயக்க (2021.01.27 வரை) இல. 82/1, அரலிய உயன, “சேனார”, பல்லேகம, எம்பிலிபிட்டிய	
திருமதி. பி. பிரியங்கிகா சிகேரா (2021.03.16 இலிருந்து) இல. 25/1, சந்திரா வெத்தசிங்ஹ மாவத்தை, கொஸ்வத்தை வீதி, நாவல.	• Writing for BA Early Childhood Education (Last Semester) • Diploma in Psychology and Counselling • Diploma in Montessori Method of Education with Distinction
14. திரு. லக்சென் அபேகுணசேகர (2021.01.27 வரை) இல. 524, அபேசிறி, கோணவலை, களனி.	


திரு. டீ.எம்.நிரஞ்சன் திஸாநாயக்க (2021.03.16 ஆம் திகதியிலிருந்து) இல. 126/4ஏ, ஸ்டேன்லி திலக்கரத்ன மாவத்தை, நுகேகொடை.	• General Certificate in Education Advanced Level • Certificate in Marketing
15. திரு. ரங்க பெரேரா (2021.03.23 வரை) சத்தர நிறுவனம், மகரகமை.	
திரு. ஜீ. சமந்த குமார (2021.03.23 இலிருந்து) குடியிருப்பு, கல்முருவ, மாதம்பே	• Master of Science (Floriculture and Landscaping Architecture • Diploma in Agriculture • Diploma in Journalism • Bachelor of Science (Plantation Management)

பணிப்பாளர் சபை உத்தியோகத்தர்கள்

திரு. தரங்க நளீன் கம்லத்	தலைவர்
பேராசிரியர் மஹிந்த ரூபசிங்ஹ	பிரதி தலைவர்
திரு. பீ.ஆர். றொட்ரிகோ	பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு)
திருமதி. ஆர்.எம்.ஏ.பீ. சமரதிவாகர	பணிப்பாளர் (தரநிர்ணயம்) 2021.11.23 ஆம் திகதி ஓய்வு பெற்றார்.
திரு. சுமேத ஜயசிங்ஹ	பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் ஆளணி)
திரு. ஜீ.எச்.வீ.என்.டப். டி சில்வா	பிரதி பணிப்பாளர் / பணிப்பாளர் (பயிற்சி) ப.க. (2019.07.10 இலிருந்து இதுவரை)
திருமதி. என்.டப்.என். சந்தமாலி	உள்ளக கணக்காய்வு / பணிப்பாளர் (நிதி) அ.வ. (2020.06.11 இலிருந்து இதுவரை)
திரு. ரீ.பீ.கே. பெரேரா	பிரதி பணிப்பாளர் (தரநிர்ணயம்)
திரு. சீ.பீ. சுபசிங்ஹ	உதவி பணிப்பாளர் (தி திட்டமிடல் ரூ உதவி பணிப்பாளர் (பேணல் மற்றும் சிவில்) (2021.09.27 - 2021.11.22) பணிப்பாளர் (தரநிர்ணயம்) ப.க. (2021.11.23 ஆம் திகதியிலிருந்து இதுவரை)
திரு. எஸ்.வீ.பீ. விக்ரமசிங்ஹ	உதவி பணிப்பாளர் (மதிப்பீடு)
திரு. டப்.ஏ.கே.எஸ். குமார	உதவி பணிப்பாளர் (பணிப் பயிற்சி) / உதவி பணிப்பாளர் (விசேட கைத்தொழில் பயிற்சி) (2021.09.27 - 2021.11.22)
திரு. ஏ.ஜே. பதிரண	உதவி பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்)
திரு. எம்.எல்.பீ. பர்னாந்து	உதவி பணிப்பாளர் (தொழில் வழிகாட்டி மற்றும் விற்பனை)
திரு. ஜீ.பீ. சுனில்	உதவி பணிப்பாளர் (NSS)
திரு. ஆர்.டப்.எம்.ஏ.ஜே. ரத்னாயக்க	உதவி பணிப்பாளர் (ஆளணி முகாமைத்துவம்)
திருமதி. யூ.எம். பிரபோஷிதீ	உதவி பணிப்பாளர் (கணக்குகள் மற்றும் நிர்வாகம்)
திரு. என்.டீ.பீ. உஸ்கொடாரச்சி	உதவி பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் வழங்கல்)
திரு. ரீ.எஸ்.பீ.ஏ. விக்கிரமசிங்க	உதவி பணிப்பாளர் (ஆளணி அபிவிருத்தி) (2021.11.01 ஆம் திகதி விலகிக் கொண்டார்)
திருமதி. பீ.எம். விதானகே	உதவி பணிப்பாளர் (பயிற்சி சேவைகள்)
திரு. ஏ.எச்.எஸ்.பீ. விஜேரத்ன	உதவி பணிப்பாளர் (மேற்பார்வை)
திரு. எம்.எம்.பீ. பர்னாந்து	பயிற்சி முகாமைத்துவம் / உதவி பணிப்பாளர் (பேணல் மற்றும் சிவில்) ப.க. (2021.09.01 ஆம் திகதி விலகிக் கொண்டார்)
திரு. கே.ஏ.எஸ்.எஸ். ஜயசிங்க	உதவி பணிப்பாளர் (விசேட பணிப் பயிற்சி)
திரு. பீ.எஸ்.டப். திஸாநாயக்க	உதவி பணிப்பாளர் (தொழிலாளர்) (2021.10.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை)
திருமதி. எச்.எம்.பி.ஏ.கே. விஜேரத்ன	உதவி பணிப்பாளர் (சான்றிதழ்) (2021.11.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை)
திரு. டீ.ஆர். சபுதந்த்ரீ	பணிப்பாளர் / அதிபர் - IET
திருமதி. எச்.ஏ.என்.டீ. குமாரி	பணிப்பாளர் / அதிபர் - AETI கூ பிரிவுத் தலைவர் (பேணல் மற்றும் சிவில்) (2021.12.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை)
திரு. டீ.எல்.ஏ.கே. திஸாநாயக்க	பணிப்பாளர் / அதிபர் (ப.க.) - AETI (2021.12.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை)
திரு. எம்.எச்.என்.பீ. தர்மசிறி	பணிப்பாளர் / அதிபர் (ப.க.) - IETI

மாவட்ட முகாமையாளர்கள்

திரு. எஸ்.டீ. அபேவிக்ரம	- அம்பாந்தோட்டை
திரு. ஏ. மசூர்	- அம்பாறை
திருமதி. டீ.டீ. ஜயலத்	- கேகாலை
திரு. எம்.ஆர்.டீ.ஏ.எஸ். குணரத்ன	- கொழும்பு
திரு. யூ.எம்.கே. நாணாயக்கார	- மாத்தறை
திரு. பீ.கே.பீ. குணவர்தன	- பதுளை
திரு. பீ. நாரன்கொட	- காலி
திரு. பி.எம்.ஜே.எஸ்.கே. ரணராஜா	- மாத்தளை
திரு. எஸ்.ஏ.எம்.எஸ்.எம். சலீம் மௌலானா	- மட்டக்களப்பு
திரு. எஸ். வீனஸ்	- மன்னார்
திரு. எஸ். சுபாஷ் (ப.க.)	- வவுனியா
திரு. பி.ஏ.யூ.ஏ. கருணாரத்ன (2021.01.15 ஆம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றார்) திரு. ஓ.கே.ஜி.ஏ. சமன் குமார (2021.01.15 ஆம் திகதியிலிருந்து இதுவரை)	- கண்டி
திரு. ஜி.ரீ. ரத்னகுமார (ப.க.)	- யாழ்ப்பாணம்
திரு. ஜே. உதயவர்தன (ப.க.) (2021.12.08 ஆம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றார்)	- குருணாகலை
திருமதி. எஸ். சிவகௌரி (ப.க.)	- முல்லைத்தீவு
திரு. யூ.ஜி.என். சமீர (ப.க.)	- பொலன்னறுவை
திரு. எஸ்.பீ.சீ.ஜே. மைத்ரீதாச (ப.க.)	- மொணராகலை
திரு. கே. பத்மநாதன் (ப.க.)	- திருகோணமலை
திருமதி. எச்.எம்.பி.ஏ. விஜேரத்ன	- களுத்துறை
திரு. வை.எஸ். ஜயதிலக (ப.க.)	- இரத்தினபுரி
திருமதி. கே.கே. திஸ்ஸங்க (ப.க.)	- கம்பகா
திரு. ரீ.எம்.ரீ.பி. கருணாரத்ன (ப.க.)	- அனுராதபுரம்
திரு. வை. யோகேஸ்வரன் (ப.க.)	- கிளிநொச்சி
திரு. ஆர்.எம்.என்.எஸ்.கே. ரத்நாயக்க (ப.க.)	- புத்தளம்
திரு. டீ.ஏ.டீ. சூரியபண்டார (ப.க.)	- நுவரெலியா


National Apprentice & Industrial Training Authority
Organizational Structure
Board Of Management
Chairman /CEO
Vice Chairman
Director General
Institutes/ Districts
Director Admin. & H.R.
Director Training
Director Quality
Director Planning & Monitoring
Director Finance
A.D. HRD
A.D. HRM
A.D. Maint.& Civil .
A.D. Admin
A.D. Training Service
A.D. Training
A.D. Cluster
A.D. SIT
A.D. OJT
A.D. C.G.& Marketing
A.D. Quality
A.D. NSS
A.D. Assesment
A.D. Certificate
A.D. Information Systems
A.D. Planning & Develop.
A.D. Monitoring
A.D. Acc. & Controll
B/ Sec Leg.Off
Acct. Officer
Acct. Officer
Acct. Officer
Book Keeper
Management Asst.
Office Aide
Stat. cian
D.B Adm
Sys. Adm
T.O.
Inspec.
Q.A. Off.
Inspec
Management Asst.
Office Aide
A.O.
Transl ator.
M.A.
Tech. Officer
Drft.M. M.A.
Proc. Officer
VRU Officer
Trp. Officer
M.A.
Drivers
Internal Auditor
I.A.O
M.A.
Office Aide

பயிற்சி முறைகளும் ஏனைய பிரதான நிகழ்ச்சித் திட்டங்களும்

பயிற்சி முறைகளை பிரதானமாக கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி, நிறுவனஞ்சார் பயிற்சி/ நிலைய மைய இரட்டைப் பயிற்சி, எந்திரசாலைப் பயிற்சி, பணிப் பயிற்சி என வகைப்படுத்தலாம்.

◆ கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி

நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி நடவடிக்கைகளுக்கிடையே பிரதானமான பயிற்சி முறையாக இப் பயிற்சி முறை விளங்குவதோடு, கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி வழங்குவதற்கென இலங்கையில் அதிகாரம் பெற்றுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாக தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையாகும். இப் பயிற்சி முறையில் பயிலுநர்கள் பயிற்சிக் காலத்தில் வேலை செய்து கொண்டு கற்பதன் மூலமாகத் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்ளும் நிமித்தம் அவர்கள் கைத்தொழிலில் இணைக்கப்படுகின்றனர்.

இங்கு பயிற்சி பெறுநருக்கு பின்வரும் முறைகளில் ஒன்றின் கீழ் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் உண்டு.

i. கைத்தொழில் வினைஞர் பயிலுநர் பயிற்சி
ii. தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் முறை
iii. நிலைய மட்டப் பயிலுநர் பயிற்சி
iv. கிராமிய மட்டப் பயிலுநர் பயிற்சி

◆ கைத்தொழில் வினைஞர் பயிலுநர் பயிற்சி

ஒவ்வொரு துறைக்கும் விசேடத்துவம் வாய்ந்த தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் ஆலோசனைக் குழுவினால் (ஜேவுயுஊ) ஒவ்வொரு துறைக்கும் பயிற்சி நியமங்கள் தயாரிக்கப்படும் போது அந் நியமங்களுக்கமைவாக பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கைத்தொழிலர்கள் மற்றும் பயிலுநர்கள் இடையே உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர் ஒவ்வொரு நிறுவனத்திலும் பயிலுநர் பயிற்சியை ஆரம்பிக்க முடியும்.

◆ தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் முறைமை (ஏஏஞ)

பயிலுநர் பயிற்சியின் கீழ் 51 தொழில்களை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இம் முறையில் கைத்தொழில் வினைஞர் பயிலுநர் முறையிலே கைத்தொழிலர்கள் மற்றும் பயிலுநர்கள் இடையே உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர் ஒவ்வொரு நிறுவனத்திலும் பயிலுநர் பயிற்சியை ஆரம்பிக்க முடியும். இம் முறையில் பயிற்சி நிறுவனங்கள்/ கைத்தொழில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுடன் பயிலுநர்கள் தொடர்ச்சியான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுதலும் வேண்டும். பயிற்சியின் இறுதியில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டாளர்களினால் இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை நடாத்தப்பட்டு அந்தந்த மட்டங்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

◆ அமைவிட பயிலுநர் பயிற்சி

இப் பயிற்சி முறையின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உரித்தான கைத்தொழிற் பயிற்சி முறைகளை பெற்றுக் கொள்ள பயிலுநர்களை ஈடுபடுத்துவதோடு, குறித்த பயிற்சி நிறுவனம் மற்றும் அதிகாரசபையுடன் இணைந்து தயாரிக்கப்படுகின்றது.





◆ கிராமிய மட்ட பயிலுநர் பயிற்சி

கைத்தொழில் வினைஞர் மட்ட தொழில்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பயிற்சி தராதரங்களுக்கு அமைவாக பயிற்சி வழங்கப்பட முடியாத பயிலுநர்களுக்கு கிராமிய பயிற்சி வசதிகளை உபயோகித்து கிராமிய மட்டத்திலுள்ள பயிற்சி பெறுநர்களுக்குப் பயிற்சி வழங்குவதனை இலக்காகக் கொண்டு கிராமிய பயிலுநர் பயிற்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான பயிற்சி தராதரங்கள் குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடி அதிகாரசபையினூடாகத் தயாரிக்கப்படும்.

கைத்தொழில் அடிப்படையிலான கைத்தொழில் வினைஞர் பயிலுநர்களுக்கும் தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் பெறவுள்ளோருக்குமான கோட்பாட்டு அறிவினை பயிற்சியினூடாகவும் தொலைக்கல்வி ஊடாகவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பயிலுநர்களுக்குத் தேவையான அடிப்படை கோட்பாடு மற்றும் நடைமுறை அறிவு குறித்த காலப்பகுதியில் உரிய பயிற்சி மத்திய நிலையத்தினூடாக வழங்கப்படுவதோடு, மேலும் அவர்களுக்குப் பாட விடயங்கள் குறித்த சுய கற்றலுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அச்சடிக்கப்பட்ட பாடவிதானங்கள் தொகுதிகள் அதிகாரசபையினூடாகத் தபால் மூலமாக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அச்சு குறித்த பாடத்தொகுதியை கற்கும் போது பயிலுநர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும், நெருக்கடிகளையும் தீர்த்துக் கொள்வதற்காக தற்போது வார இறுதி வகுப்புக்கள் அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாகத் தொழிலுக்குத் தேவையான ஆங்கில அறிவினை மேம்படுத்துவதற்காக ஆங்கில பாடத்தொகுதிகளும் பயிலுநர்களுக்கு வழங்கப்படுகின்றது.

◆ நிறுவனஞ்சார் பயிற்சி/ மத்திய நிலையஞ்சார் இரட்டைப் பயிற்சி



இம்முறையின் கீழ் பயிலுநர்கள் நேரடியாகத் தேசிய பயிற்சி நிறுவகத்திற்கு அல்லது பிரதேச பயிற்சி நிறுவனத்திற்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இணைக்கப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன் அதன்பின்னர் அரச அல்லது தனியார் நிறுவனமொன்றுக்குப் பணி தொடர்பான பயிற்சிக்காக அனுப்பப்படுவர். பயிற்சி நிறுவனம் அல்லது பயிற்சி நிலையம் மூலம் குறித்த கோட்பாடு மற்றும் நடைமுறை அறிவு வழங்கப்படும். மீளாய்வாண்டில் அதிகாரசபையின் கீழ் தேசிய நிறுவகங்கள் மூவருக்கு (3) மேலதிகமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் 74 மத்திய நிலையங்கள் நடாத்தப்படுகின்றன. இந்த நிலையங்களில் நடாத்தப்படும் கற்கைநெறிகளின் கால எல்லைகள் 06 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரையாக வேறுபட்டு காணப்படுகின்றன.

◆ எந்திரசாலைப் பயிற்சி

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கங் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் 38 (சீ) பிரிவிற்கு அமைய, மொறட்டுவை, பேராதெனிய மற்றும் றுஹுணு பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களின் பொறியியல் பட்டத்திற்கும், பல்கலைக்கழக மற்றும் ஏனைய தொழிற் கல்வி நிறுவனங்களினூடாக நடாத்தப்படும் டிப்ளோமா கற்கைநெறிக்கும் தேவையான எந்திரசாலை பயிற்சிகள் அதிகாரசபையின் ஊடாக வழங்கப்படுகின்றது.





◆ தொழிலுடனானப் பயிற்சி

ஏனைய தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நிறுவனப் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு அதிகாரசபையினூடாக ஆறு மாத கால வேலையுடனான பயிற்சி வழங்கப்படுகின்றது. விசேடமாக கைத்தொழிற் பல்கலைக்கழகம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அரச/ தனியார் நிறுவனங்களில் தொழிற் பயிற்சித் துறையில் பயிற்சி பெறுவோருக்குக் கைத்தொழிற் பிரிவில் பிரயோகப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென இப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் வினைஞர் பயிலுநர்கள் மற்றும் பயிலுநர் சான்றிதழ் முறையின் கீழ் பயிற்சியினை நிறைவு செய்த பயிலுநர்களுக்கு இறுதி தொழிற் பரீட்சை தலைமை அலுவலகத்தின் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படும். எனினும், கூட்டு அலுவலகத்தின் தோற்றத்துடன் இச் செயற்பாட்டினை பரவலாக்கம் செய்யவுள்ள நிலையில தற்போது கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி மாவட்டங்களில் மாத்திரம் குறித்த கூட்டு அலுவலகத்தினூடாக இறுதி தொழிற் பரீட்சை நடாத்தப்படுகின்றது.



இதற்கு மேலதிகமாகத் தேசிய தொழிற் தகைமை பரீட்சை (ஏஞ) மற்றும் தொழிற் பரீட்சை (வேவு) தொடர்பான மதிப்பீடுகள் தலைமை அலுவலகத்தின் ஊடாக நடாத்தப்படும்.

தேசிய நிறுவனங்களின் சகல சான்றிதழ்களும் பணிப்பாளர் அதிபர் அல்லது பதிவாளருடன் அதிகாரசபையின் தவிசாளரின் கையொப்பத்துடன் குறித்த நிறுவனத்தினால் வழங்கப்படும்.

◆ தேசிய தொழிற் பரீட்சை மற்றும் தேசிய தொழிற் தகைமை

இவ் வேலைத்திட்டத்தின் ஊடாக தொழிற் பரீட்சை நடாத்தப்பட்டு குறித்த திறன்களைக் கொண்டுள்ள வினைஞர்களுக்கு செயற்றிறமை சான்றிதழ் வழங்கப்படுகின்றது. முறைசாரா பயிற்சியினை பெற்று தற்போது சேவை புரியும் கைவினைஞர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டத் தொழிற் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழிலை பெற்றுக் கொள்வதற்காக இம்முறை பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.

தற்போதுள்ள தொழிற் பரீட்சை தரம் ஐஐஐ, தரம் ஐஐ மற்றும் தரம் ஐ என பகுதியளவிலான திறன்கள், திறன்கள், விசேட திறன்கள் என 3 மட்டங்களில் நடைபெறுகின்றன. தேசிய தொழிற் பரீட்சை முறையானது தேசிய திறன்கள் தராதரம் அல்லாத 10 தொழில்களுக்கு இலங்கை கணனி திறன்கள் சான்றிதழ் வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தேசிய தொழிற் பரீட்சை முறையானது தற்போது தேசிய தொழிற் தகைமை (ஏஞ) சான்றிதழ்

முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் முன் கற்கை மதிப்பீடாக (சீடு) பரிணாமமடைந்து செயற்படுகின்றது. இதற்காக முறைசாரா பயிற்சியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலை பெற்றுக் கொள்வதற்காக வழிகாட்டப்படும்.

இக் கைத்தொழிற் பிரவேசத்திற்காகப் பயிலுநர்களிடமிருந்து அதிக கேள்வி நிலவுகிறது. அத்தோடு இங்கு தொழில் மட்டம் ஏஐஐ வரையான தரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, பயிற்சி பெறுபவருக்கு அவர் பூர்த்தி செய்த மட்டத்திலிருந்து மீண்டும் அடுத்த மட்டத்தை ஆரம்பிப்பதற்கு இயலுமானதாக இருத்தல் சிறப்பான அம்சமாகும். அத்தோடு ஏதேனும் மட்டத்தில் இடைநிறுத்தி மீண்டும் ஆரம்பிப்பதாயின் வேறு பயிற்சி நிலையம் ஊடாக அதனை பூர்த்தி செய்ய முடிதலும் இங்கு பயிற்சி பெறுவோருக்கு உள்ள சிறந்த வசதியாகும். இங்குள்ள இன்னுமொரு சிறப்பியல்பு பயிற்சி பெறுவோருக்கு உள்ள சிறந்த வசதியாகும். இங்குள்ள இன்னுமொரு சிறப்பியல்பு பயிற்சி பெறுவோருக்கு பட்டம் பெறும் மட்டம் வரையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் உண்டு.

◆ தேசிய திறன்கள் தராதரங்களின் அபிவிருத்தி

அதிகாரசபையினூடாகத் தொழிற் பயிற்சித் துறைகளுக்கென மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடாகும். தேசிய திறன்கள் தராதரங்களை தயாரிக்கும் சட்டரீதியான அதிகார சட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் கண்டறியப்படும் தொழில்களுக்குரிய திறன்கள் தராதரங்களை தயாரித்தல் மற்றும் செல்லுபடியாக்கல் இதன் கீழ் நடைபெறும்.

திரண்ட மிகை பகுதி நேரம்	11a	42,671,516.72		42,671,516.72	
ஒதுக்கங்கள்	11b	638,668,797.82		522,598,339.35	
அரசாங்க கொடைகள் - மூலதனம்	11c	7,231,251.52		12,499,162.90	
அரசாங்க கொடைகள் - SSDP	11d	62,789,506.99		62,789,506.99	
பிற்போடப்பட்ட வருமானம்	13	897,154,441.03	2,504,065,781.25	1,113,606,890.65	2,691,076,138.02
நடைமுறை அல்லாத பரிப்புக்கள்					
பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு	12	252,257,655.00	252,257,655.00	260,766,245.50	260,766,245.50
நடைமுறை பரிப்புக்கள்					
செலுத்த வேண்டியவை	10	198,247,373.94	198,247,373.94	226,327,917.51	226,327,917.51
மொத்த உரிமையாண்மையும், பரிப்புக்களும்			**2,954,570,810.19**		**3,178,170,301.03**

கணக்கீட்டுக் கொள்கைகளையும், பக்கம் 8 தொடக்கம் 19 வரையில் குறிப்புகளின் படிவங்களையும் இந் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியொன்றாக கவனத்தில்கொள்ளப்படுதல் வேண்டும்.

சான்றுப்படுத்தல்
மேற்படி நிதிக் கூற்றின் மூலம் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான குறித்த மிகை/ (பற்றாக்குறை) தொடர்பாக உண்மையானதும், நியாயமானதுமான நிலையைக் காட்டுகின்றது என்பதை நாம் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

இந் நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்பு முகாமைத்துவச் சபையுடன் தொடர்புடையது.
இந் நிதிக் கூற்று முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் அவர்களுக்கு பதிலாக ஒப்பமிடப்பட்டுள்ளது.

.....	.....
டப் எம் ஏ கே வீரசேகர	டப் ருச்சிக அமரசேகர
பணிப்பாளர் (நிதி)	தலைவர் / பிரதான நிறைவேற்றுநர்
.....	.....
கலாநிதி காஞ்சன சில்வா	டீ ஆர் சோமவர்தன
பணிப்பாளர் சபை உறுப்பினர்	பணிப்பாளர் சபை உறுப்பினர்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று

விபரம்	குறிப்பு	**2021** (ரூ.)	**2020** (ரூ.)
தொழிற்பாட்டு வருமானம்			
அரசாங்க கொடைகள் - மீண்டெழும்		1,093,500,000.00	1,083,500,000.00
அரசாங்க கொடைகள் - மூலதன புத்துருவாக்கம்		8,990,978.79	4,131,349.37
சுயஉழைப்பு வருமானம்	11a		-
மாற்றப்பட்ட பிற்போடப்பட்ட வருமானங்கள்	13	84,680,849.37	120,666,730.84
ஏனைய வருமானங்கள்			
திறன்விருத்திப் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		28,829,335.01	16,592,926.99
ஏனைய மானியங்கள்	14	137,075.00	8,961,505.52
MPDTF (100,000 தொழில்வாய்ப்புகள்) மானியங்கள் - பல்திறன் அபிவிருத்தி செயலணி		88,823,618.04	
அமைச்சின் மானியங்கள் - திறன்விருத்தி சிசு சவிய நிகழ்ச்சித் திட்டம்		15,819,000.00	
ஏனைய வருமானங்கள்	15	78,309,067.10	55,559,579.48
மொத்த வருமானங்கள்		**1,399,089,923.31**	**1,289,412,092.20**
தொழிற்பாட்டு செலவுகள்			
பயிற்சி பயன்பாட்டு உபகரணங்கள்	16	14,367,681.27	11,966,251.50
ஏனைய பயிற்சி செலவுகள்	17	184,330,473.80	94,988,254.78
பணிக் குழுவிற்கான செலவுகள் - தனிப்பட்ட வேதனங்கள்	18	739,442,023.76	719,683,691.90
பணிக் குழுவிற்கான செலவுகள் - ஏனையவை	19	25,227,389.43	61,227,575.74
போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்	20	70,611,989.38	57,036,260.64
வழங்கல்கள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள்	21	17,709,596.44	20,527,602.70
உபகரணங்களின் பராமரிப்பு	22	7,764,529.91	6,432,302.79
சூழல் பராமரிப்பு	23	157,983,472.86	128,792,638.48
நிதி மற்றும் ஏனைய செலவுகள்	24	6,312,258.21	7,870,914.28
தேய்வுகள்	25	231,946,085.35	223,859,441.94
கணக்காய்வுக் கட்டணம்		1,171,500.00	735,617.32
மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்		**1,456,867,000.41**	**1,333,120,552.07**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் தேறிய மிகை (பற்றாக்குறை)		**(57,777,077.10)**	**(43,708,459.87)**
மிகை / பற்றாக்குறை தொடர்பாக திரண்ட கூற்று			
ஈக்விட்டி நிதி			
முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு சனவரி மாதம் 1 ஆந் திகதியில்		1,151,839,418.43	1,163,368,948.25
கடந்த ஆண்டின் செம்மையாக்கம்		(23,583,377.14)	(11,529,529.82)
ஆண்டின் இறுதி மீதி		1,128,256,041.29	1,151,839,418.43
கடந்த ஆண்டில் நிறுத்தி வைத்த உழைப்பு		(214,928,697.02)	(171,220,237.15)
பகுதி நேரம்			
முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு சனவரி மாதம் 1 ஆந் திகதியில் பகுதிநேர		42,671,516.72	36,228,874.49
கடந்த ஆண்டின் செம்மையாக்கம்		-	6,442,642.23
மீளாய்வாண்டின் செம்மையாக்கம்		-	-
மீள குறிப்பிட்டுள்ளவாறு சனவரி மாதம் 1 ஆந் திகதியில்		955,998,860.99	1,023,290,698.00
குறித்த காலத்திற்கான தேறிய மிகை / (பற்றாக்குறை)		(57,777,077.10)	(43,708,459.87)
டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் தேறிய மிகை / (பற்றாக்குறை)		**898,221,783.89**	**979,582,238.13**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்டநிதி காசுப்பாய்ச்சல் கூற்று

விபரம்	குறிப்பு	2021 (ரூ.)		2020 (ரூ.)	
தொழிற்பாட்டு நடவடிக்கைகள்					
குறித்த காலப்பகுதிக்கான மிகை (பற்றாக்குறை)			(57,777,077.10)		(43,708,459.87)
செம்மையாக்கங்கள் :					
தேய்வுகள்		231,946,085.35		223,859,441.94	
பிற்போடப்பட்ட வருமானங்கள்		(84,680,849.37)		(120,666,730.84)	
அகற்றப்பட்ட ஆதனத்திற்கான நட்டம்		2,125.06		3,198.67	
அகற்றப்பட்ட ஆதனத்திற்கான இலாபம்		(3,148.79)		(4,067.25)	
அறவிடமுடியாத பணிக்குழு கடன்		(68,671.00)		219,550.00	
அறவிடமுடியாத பல்வேறு கடன்பட்டோர்கள்		(20,785.09)		(112,549.51)	
நைட்டா கணக்கீட்டு இலாபம் கடந்த ஆண்டு செம்மையாக்கம்		-		(15,935,510.46)	
நிலையான வைப்புக்களினால் பெறப்பட்ட வட்டி		(8,990,978.79)		(8,428,889.63)	
அட்டுறுவிற்கான மிகையாகாத ஏற்பாடுகள்		1,957,838.47		(4,047,562.97)	
அட்டுறுவிற்கான மிகை ஏற்பாடுகள்		(9,332,580.14)		-	
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள		13,133,719.50		49,348,349.50	
பணிக்கொடை கொடுப்பனவுகள்		(21,642,310.00)		(25,271,255.00)	
SLGTI சொத்து மாற்றல் இலாபம்		(16,297,465.69)			
பொருட்களினால் ஏற்பட்ட நட்டம்		30,426.39			
சரக்கிருப்பு அதிகரிப்பு / குறைவு		2,970,786.93		490,636.33	
அறவிடப்பட வேண்டியவை குறை / மிகை		1,285,185.73		5,891,290.15	
வைப்புகள், முற்கொடுப்பனவுகளும், முற்பணங்களும் அதிகரிப்பு / குறைவு		(33,469,694.26)		8,334,437.72	
குறுங்கால முதலீடு அதிகரிப்பு / குறைவு		(8,243,558.95)		(3,261,671.93)	
செலுத்தப்பட வேண்டியவை அதிகரிப்பு / குறைவு		(28,080,543.57)		(38,795,616.08)	
			40,495,581.78		71,623,050.64
தொழிற்பாட்டு நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல்			(17,281,495.32)		27,914,590.77
முதலீட்டு நடவடிக்கைகள்					
ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு		(47,734,963.35)		(22,058,145.52)	
தொழிற்படு மூலதனங்கள்		(4,298,208.33)		15,999,166.34	
நிலையான சொத்து விற்பனை முன் கொணரப்பட்டது		-		-	
பிற்போடப்பட்ட வருமானங்களின் செம்மையாக்கங்கள்			(52,033,171.68)	-	
முதலீட்டு நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல்			(52,033,171.68)		(6,058,979.18)
நிதிசார் நடவடிக்கைகள்					
அரசாங்கத்தின் மூலதனக் கொடை		40,096,000.00		37,281,750.33	
SSDP மூலதனம்		-		2,426,027.46	
பெறப்பட்ட மானியங்கள்		17,799,956.50		759,900.00	
வைப்புக்களின் வட்டி		2,281,693.10		-	
			60,177,649.60	-	
நிதிசார் நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல்			60,177,649.60		40,467,677.79
தேறிய காசு மற்றும் காசுக்கு சமமானவை அதிகரிப்பு / குறைவு			(9,137,017.40)		62,323,289.38
குறித்த காலப் பகுதியின் ஆரம்ப காசு மற்றும் காசுக்கு சமமானவை			193,544,607.89		131,221,318.51
குறித்த காலப் பகுதியின் இறுதி காசு மற்றும் காசுக்கு சமமானவை			**184,407,590.49**		**193,544,607.89**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
உரிமைத்துவ மாற்றல்கள் கூற்று

விபரம்	திரண்ட நிதி	அரசாங்க மூலதனக் கொடை	SSDP மூலதனம்	பிற்போடப்பட்ட வருமான கொடை (பரிப்பு)	பெறப்பட்ட உதவிகள்	பகுதி நேர கணக்கீட்டு இலாபம்	மோட்டார் வண்டி வருமான ஒதுக்கம்	பகுதி நேரம் மீதான மூலதன ஒதுக்கம்	பகுதி நேரம் மீதான கடப்பாட்டு ஒதுக்கம்	AETI காணி மாற்றல் இலாபம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	மொத்தம்
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியில் மீதி	**1,151,839,418.43**	**12,499,162.91**	**62,789,506.99**	**1,113,606,890.82**	**114,363,459.55**	**42,671,516.72**	**7,415,059.28**	**11,148,914.78**	**5,902,130.56**	**290,860,815.72**	**92,907,959.29**	**2,906,004,835.05**
கூட்டுக : பெறப்பட்ட மானியங்கள் 2021					62,716,199.91							**62,716,199.91**
கூட்டுக : செம்மையாக்கல்				1,237,755,701.22	1,223,271,018.41							**2,461,026,719.63**
நிறுத்தி வைத்த வருமானங்கள்	(214,928,697.02)											**(214,928,697.02)**
மீள குறிப்பிடப்படும் ஆரம்ப மீதி	**936,910,721.41**	**12,499,162.91**	**62,789,506.99**	**2,351,362,592.04**	**1,400,350,677.87**	**42,671,516.72**	**7,415,059.28**	**11,148,914.78**	**5,902,130.56**	**290,860,815.72**	**92,907,959.29**	**5,214,819,057.57**
GOSL ஆண்டிற்காக பெறப்பட்ட மூலதனக் கொடை		40,096,000.00										**40,096,000.00**
புத்துருவாகும் மூலதனம்		(8,990,978.79)										**(8,990,978.79)**
ஆண்டின் இலாபம்	(57,777,077.10)											**(57,777,077.10)**
ஆண்டிற்கான செம்மையாக்கம்	(23,583,377.14)			-1,437,232,343.06	(1,215,131,618.41)							**(2,675,947,338.61)**
மீள் மதிப்பீட்டு இலாபம்											76,546,967.56	**76,546,967.56**
பிற்போடப்பட்ட பரிப்பிற்கு மாற்றுதல்		(36,372,932.59)		67,705,041.59	-31,332,109.00							-
பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றுதல்				-84,680,849.37								**(84,680,849.37)**
2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் மீதி	**855,550,267.17**	**7,231,251.53**	**62,789,506.99**	**897,154,441.20**	**153,886,950.46**	**42,671,516.72**	**7,415,059.28**	**11,148,914.78**	**5,902,130.56**	**290,860,815.72**	**169,454,926.85**	**2,504,065,781.26**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
கணக்கீட்டுக் கொள்கைகள்

பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. **அறிக்கையிடும் நிறுவனம்**

1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (இதனகத்துப் பின்னர் நிறுவனம் எனக் குறிப்பிடப்படும்) இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, இராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளது.

2. **தயாரிக்கப்படும் அடிப்படை**

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதிசார் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
நிதிசார் அறிக்கைகள் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிசார் அறிக்கைகள் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.1 நிதியாண்டு 2021 ஆம் ஆண்டில், Tally System மீதிகளையும், நிதிக் கூற்றுக்களின் மீதிகளையும் இணக்கம் செய்வதற்காக தேசிய ரீதியான நிலையங்களில் பகுதி நேர பாடநெறிகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் Tally System இற்கு எடுக்கப்பட்டுள்ளது.

3. **ஒப்பீட்டுத் தகவல்கள்**

கடந்த ஆண்டிற்கான பெறுமதிகள் குறித்த ஆண்டின் சமர்ப்பித்தல்களுடன் தொடர்புடையவாறு ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4. **அரசாங்கத்தின் கொடைகள் மற்றும் மானியங்கள்**

4.1 நிறுவனத்தின் செலவுகளானது, அரசாங்கத்தின் கொடைகளின் மீது தங்கியுள்ளது அக் கொடைகள் பெறுகைகளாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவுகளுக்காக குறித்த அரசாங்கத்தின் கொடைகளானது விரிவாக வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளதோடு, மூலதன செலவுகளுக்காக பெறுகைகள் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி நிதியில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

4.2 சொத்துக்களின் மாற்றுகையாக கிடைக்கப்பெறும் அரசாங்கத்தின் கொடைகளானது, பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதி அவற்றின் ஆயுட்காலத்தின் படி கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

5. <u>சொத்துகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை</u>

5.1 <u>தொக்குகள்</u>

தொக்கானது பொதுவாக கிரய அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. வழக்கிழந்த அச்சீட்டு பொருட்களின் தொக்கிற்காக 5% ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

5.2 <u>பெறுகைகள்</u>

அறவிடப்பட வேண்டிய தொகைகள் அவ்வாறே காட்டப்பட்டுள்ளதோடு, 2021.12.31 ஆந் திகதியின் போது அதிகார சபையில் சேவையாற்றாத பணியாளர்களின் ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடனுக்காக 100% ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. உள்ளக ரீதியான கொடுக்கல்வாங்கல்களில் அறவிடப்பட வேண்டிய கடன் தவிர்ந்த ஏனைய அனைத்து கடன்பட்டோர்களுக்காக 5% ஏற்பாடு அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.3 <u>ஆதனம், பொறி மற்றும் உபகரணம்</u>

(I) <u>ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஏற்பிசைவு மற்றும் அளவீடுகள்</u>

சொத்துக்களுடன் தொடர்புடையதான எதிர்கால பொருளாதார பிரதிலாபங்கள் நிறுவனம் தொடர்ந்து ஈட்டுவதற்கான நிகழ்தகவு இருக்குமாயின், அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக இனங்கண்டு இருப்பதோடு சொத்துக்களின் கிரயமானது LKAS 16 – ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு அமைவாக உறுதியாக அளவிட முடியும். ஆரம்பத்தில், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரய அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

(II) <u>கிரயம்</u>

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயங்களில் அவற்றின் கொள்வனவுகள் மற்றும் பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்பட்ட நேர்க் கிரயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகார சபையின் செயலாற்றுகையை பேணுவதற்காக அல்லது விருத்தி செய்வதற்காக நிலையான சொத்துக்களின் சுவீகரிப்பு, நீடிப்பு அல்லது விருத்தி செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னைய செலவுகளானது மூலதன செலவாகக் கருதப்பட்டுள்ளது.

(III) மீள் மதிப்பீட்டுப் படிவம் :

நிறுவனமானது ஆரம்ப இனங்காணலுக்குப் பின்னர் அளவீட்டுக்காக மேற்குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர்ந்து ஏனைய சொத்துக்களின் உரிய வகுப்பிற்கு மீள் மதிப்பீட்டு படிவத்தை பயன்படுத்துகின்றது. இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் அடிப்படையில் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயமான பெறுமதியானது

தீர்மானிக்கப்படுவதோடு, குறித்த ஆவணங்கள் இன்மையும், காலவரையறை காரணமாக முழு சொத்துக்களின் வகுப்புக்களையும் பூர்த்தி செய்வதற்கு இயலாது போனது.

சுயாதீன மதிப்பீட்டாளர்கள் மற்றும் NAITA இன் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, பொதுவான இயல்புடைய சொத்துக்களின் நடைமுறை சந்தை விலை காணப்படும் போது, அவ்வாறான சொத்துக்களின் நியாயமானப் பெறுமதியைத் தீர்மானிக்கும் போது அவ்வாறான சான்றுகள் கவனத்தில்கொள்ளப்படும். அச் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் கொண்டு செல்லப்படும், பின்னரான காலப்பகுதியில் திரண்ட தேய்வு மற்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தினத்திற்குப் பின்னர் அறவிடப்பட்ட திரண்ட நட்டஇழப்புக்களை விட குறைவு. சொத்தொன்றை மீள் மதிப்பீடு செய்யும் போது, கொண்டு செல்லப்படும் பெறுமதியில் ஏதேனும் அதிகரிப்பு வேறு விரிவான வருமானமாக இனங்கண்டு மீள் மதிப்பீட்டுக் குழுவின் கீழ் உரிமைத்துவத்துடன் சேர்க்கப்படும், அதனை வருமானக் கூற்றில் முன்னரே இனங்கண்டு அச்சொத்தின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் குறைவினை பிரதிபலிக்கும் பெறுமதியை தவிர்த்து, முன்னர் செலவிடப்பட்ட குறையும் பெறுமதிக்கான அதிகரிப்பு வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

மீள் மதிப்பீட்டில் எழும் கொண்டு செல்லப்படும் பெறுமதியின் குறைவு வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளதோடு, அச்சொத்தின் முன்னரான மேலதிகப் பெறுமதியில் ஈடு செய்யும் எந்தவொரு குறைவும் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காண்பது அது குறித்து மீள் மதிப்பீட்டு மேலதிகப் பெறுமதியில் உள்ள எந்தவொரு கடன் மீதியின் பெறுமதிக்கேயாகும்.

சொத்தொன்று தொடர்பாக மீள் மதிப்பீட்டுக் குழுவின் எஞ்சியிருக்கும் எந்தவொரு மீதியும், ஓய்வுபெறும் போது அல்லது ஆதனங்களை அகற்றும் போது நிறுத்திவைத்த வருமானத்திற்கு நேரடியாக மாற்றப்படும். நிலையான சொத்துக்களின் சுவீகரிப்பு, நீடிப்பு அல்லது விருத்தி செய்வதற்கான அல்லது வருவாய் திறன்விருத்தி, வினைதிறன் அல்லது செயற்பாட்டின் வினைதிறனை அதிகரித்தலுக்காக ஏற்கப்படும் பின்னைய செலவுகளானது மூலதன செலவாகக் கருதப்படும். சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகள் இனங்காணப்பட்டுள்ளது.

(IV) இனங்காணப்படாதவை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுகையில் அல்லது மாற்றுகையில் அவற்றை பயன்பாட்டின் பின் எதிர்கால பொருளாதார பிரதிலாபங்களை கொண்டவை அல்ல என இனங்காணவில்லை. சொத்துக்களை இனங்காணாததால் ஏற்படும் எந்தவொரு இலாபம் அல்லது நட்டத்தினை (தேறிய சொத்தினை அகற்றுவதனால் பெறப்படும் வருமானம் மற்றும் சொத்துக்களை கொண்டு செல்லும் பெறுமதிக்கு இடையில் காணப்படும் வேறுபாடானது பெறுமதியாகக் கணக்கிடப்படும்) மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் 'ஏனைய செயற்பாட்டு இலாபம்' இல் இனங்காணவில்லை.

(V) அருவச் சொத்துக்கள் - கணனி மென்பொருளை இனங்காணும் அடிப்படை
சொத்தொன்றிற்கு அறவிடக்கூடிய எதிர்கால பொருளாதார பிரதிலாபங்கள் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஈட்டிக்கொள்வதற்கான நிகழ்தகவு காணப்படும் அருவச் சொத்தொன்றாக இனங்காணப்பட்டுள்ளதோடு, சொத்துக்களின் கிரயத்தை உறுதியாக அளவீடு செய்ய முடியும்.

நிறுவனத்தினால் ஏற்கப்படும், பயன்பாட்டிற்கான உறுதிப்பத்திரத்தை பெற்றுள்ள, அதனுடன் தொடர்புடைய வன்பொருட்களுக்கு அவசியமற்ற, தெளிவாக அடையாளம் காணக்கூடிய, நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும், உறுதியாக அளவீடு செய்யக்கூடிய மற்றும் எதிர்கால பொருளாதார வருவாய்களுக்கு வழிவகுக்கும் என கருதக்கூடிய சகல கணனி மென்பொருள் கிரயங்களும் அருவச் சொத்து வகுதியின் கீழ் நிதி நிலைமை மற்றும் குறைந்து செல்லும் திரண்ட தேய்வு மற்றும் திரண்ட சேதஇழப்பு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படும்.

(VI) குறுங்கால இருப்பேடு

மூலதனமாக்க முடியாத குறுங்கால இருப்பு உருப்படிகள் நிதி செயலாற்றுகை கூற்றிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ் உருப்படியை நிர்வகிக்கும் நோக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, பௌதீக ரீதியில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(VII) தேய்வு

தேய்மானம் கணக்கிடப்படுவது, சொத்துக்களின் பயன்தறு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறை அடிப்படையிலாகும்.

சொத்துக்களின் வகுதி	**தேய்வு வீதம்**
குத்தகைக் காணிகள்	குத்தகை கால அடிப்படை
கட்டிடங்கள்	5%
பொறிகளும், உபகரணங்களும்	10%
தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	10%
கணனிகளும், பாகங்களும்	25%
மோட்டார் வண்டிகள்	25%
நூலக புத்தகங்கள்	10%
பயிற்சி உபகரணங்கள்	10%
அருவச் சொத்துக்கள்	10%

6. **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

கையிலுள்ள காசு, வங்கி வைப்புகள், குறுங்கால முதலீடுகள், காசு மற்றும் காசுக்கு சமமானவை என வரையறுக்க முடியும்.

கையிலுள்ள காசு மற்றும் வங்கி வைப்புகள், குறுகிய கால முதலீடுகள், இடமாற்றப்படும் காசு, காசுப் பாய்ச்சல் கூற்றின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவை எனக் கருதப்படும்.

7. <u>பரிப்புகள் மற்றும் ஏற்பாடுகள்</u>

ஐந்தொகையின் திகதியில் உள்ளவாறான அனைத்து பரிப்புக்களும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, தற்போது காணப்படுவதாக கருதப்படும் பரிப்புக்களுக்காக போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும், அவற்றின் பெறுமதியை சரியாக கணிப்பிட முடியவில்லை. கேள்விகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் அல்லது ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்தில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளானது நிதிக் கூற்றில் நடைமுறைப் பரிப்பாக கருதப்படுகின்றது. ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் நடைமுறை அல்லாத பரிப்பாக நிதிக் கூற்றில் கருதப்படுகின்றது.

8. <u>பணிக்கொடை ஏற்பாடு</u>

சகல பணியாளர்களுக்கும் ஆரம்ப ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கங் கொண்ட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் இலங்கை நிருவாக சேவையின் 16 ஆம் பிரிவிற்கு அமைவாக, பணியாளர் ஒருவர் தொடர்ந்து 5 வருட சேவையைப் பூர்த்தி செய்கையிலேயே இப்பரிப்பானது வலுவுடையதாகும்.

9. <u>வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்</u>

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகைகள் செலவுகளாக வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. அதிகார சபை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பணியாளர்களின் மொத்தச் சம்பளத்தில் 15% மற்றும் 3% இற்கு குறையாத தொகைகளை பங்களிப்புச் செய்கின்றது.

10. <u>வருமானம்</u>

அரசாங்கத்தினால் கிடைக்கப்பெற்ற மானியங்கள், மீண்டெழும் செலவாக பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் அதிகார சபையின் பல்வேறு நிதிசார் செயலாற்றுகை கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளது. மூலதனக் கொடையிலிருந்து, பிரதான புதுப்பித்தல்கள் மற்றும் மூலதன சொத்துக்களின் அதிகரிப்பிற்காக செலவு செய்யப்பட்ட தொகையானது நிதிசார் செயலாற்றுகை கூற்றுக்கு மூலதனமாக்கம் செய்யப்படாததோடு, சமமான தொகை மூலதன கொடையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

நிலையான சொத்துக்களில் இனங்காணப்பட்ட பரிப்புகள் மற்றும் தேய்வுகளுக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னர் மிகை / பற்றாக்குறை அல்லது செலவினை மிஞ்சிய வருமானம் ஏற்பட்டது.

அதிகார சபையை செயற்படுத்துகையிலும், அதன் மூலதன சொத்துக்களை வினைத்திறனாக பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் வருவாயில் வசூலிக்கப்படுகின்றன.

11. மூலதன பொறுப்புகள் மற்றும் உறுமுரிமை பரிப்புக்கள்

அனைத்து பொருள் ரீதியான மூலதனப் பொறுப்புகளையும், உறுமுரிமை பரிப்புக்களையும் கவனத்திற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகளை இனங்கண்டு தேவையான சந்தர்ப்பங்களின் போது கணக்குகளில் அவசியமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

13. காசுப் பாய்ச்சல் கூற்று

பிற்போடப்பட்ட வருமானங்கள் குறைதல் / அதிகரித்தல் காசு சாராத அசைவுகளாக நிதிப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் விதிமுறைகளின் தேவைப்பாடு மீது 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கிளிநொச்சி ஜேர்மனி கைத்தொழில் பயிற்சி நிறுவனத்திற்கான 2018 ஆம் ஆண்டிலிருந்து நிலவிய, மூலதனக் கொடைகள் மற்றும் பிற்போடப்பட்ட வருமானங்களை கணக்கு வைக்கும் போது ஏற்பட்டிருந்த ரூ. 16,297,465 பெறுமதியான தவறு இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 3 இல் 47 ஆவது பந்தியின் பிரகாரம் கடந்தகாலத்தில் சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டில் சொத்துக்கள் மாற்றல் இலாபமாக நிதிச் செயலாற்றுகை கூற்றில் பதியப்பட்டதனால் அப்பெறுமதி மீளாய்வாண்டின் குறைபாடாகவும் திரண்டநிதியில் குறைவினையும் காட்டியது.

(ஆ) மீளாய்வாண்டில் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்கையில் கொள்விளை ரூ. 110,974,250 பெறுமதியான சொத்துக்களை மீள் மதிப்பீட்டிலிருந்து விடுபட்டமை காரணமாக சொத்துக்கள், ஆதனங்கள், உபகரணங்களின் பெறுமதிகளிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பின்னரான பெறுமதியிலும் குறைவினைக் காட்டியது.

(இ) மீளாய்வாண்டில் சபைக்கு கிடைக்கவிருந்த ரூ. 67,705,041 பெறுமதியான மூலதனக் கொடைகள் தொடர்பாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் கட்டுப்பாட்டில் காணப்படும் கட்டுநாயக்க பொறியியலாளர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அவுஸ்திரேலியா கருத்திட்ட நிதியிலிருந்து கடந்த ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூ. 1,584,556,810 பெறுமதியான கட்டிடங்கள், பயிற்சி உபகரணங்கள், அருவச் சொத்துக்கள் மற்றும் ரூ. 168,937,662 பெறுமதியான புதுப்பித்தலும் ஆய்வுப் பணிக்குழுவிற்கு பயிற்சியளித்தலுக்கும் என செலவிடப்பட்டிருந்த அத்தொகைகளை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) “Multi purpose Development Task Force Training Programme 100,000” கருத்திட்டத்திற்காக சனாதிபதி செயலகத்திடமிருந்து பெறப்பட்டிருந்த ரூ. 18,770,586 பெறுமதியான தொகையை வைப்புக் கணக்கொன்றில் நிறுத்தி வைப்பதற்கு பதிலாக ஆண்டின் இலாபமாக இனங்கண்டு கொண்டதனால் அப்பெறுமதியினால் குறைவினை காட்டியது. அது மீளாய்வாண்டின் குறைபாடாக அமைந்தது.

(ஊ) சபைக்கு தனியார் நிறுவனமொன்றிலிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூ. 1,000,000 தொகையானது சபையின் வருமானமாக கணக்கு வைக்கப்படுவதற்கு பதிலாக ஊழியர் நலன்புரி நிதிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் இரண்டு நிறுவனங்களிலிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 500 டெப் இயந்திரங்களின் பெறுமதியும் பஸ் வண்டியின் பெறுமதியும் மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்படாத காரணத்தினால் கணனி மற்றும் மோட்டார் வண்டியின் பெறுமதியும் நன்கொடை கணக்கின் மீதியும் நிதிக் கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் கற்றல் வளங்கள் மத்திய நிலையத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூ. 3,351,456 பெறுமதியான 16,235 பாடத்தொகுதி புத்தகங்கள் சரக்கிருப்பின் கீழ் பதியாமல் விடுப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான ரூ. 1,490,345 பெறுமதியான செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைகள் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு, போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாயினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் இத்தால் கருதப்படுகின்றது. இவ் ஏனைய தகவல் குறித்து முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

எனது அபிப்பிராயத்தின் படி, நிதிக் கூற்றுக்களில் ஏனைய தகவல்கள் உள்ளடங்காததோடு, நான் அது குறித்த உறுதிப்பாட்டை அல்லது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கான, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிக்கும் போது, நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்கள்

எனது அறிவுக்கு எட்டியவரையில் பொருண்மையாக, பொருத்தமற்றதாக இருக்கின்றனவா என ஆராய்ந்து பார்ப்பது எனது பொறுப்பாகும்.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கப்பெற்ற ஏனைய தகவல்களின் மீது, என்னால் செய்யப்பட்ட பணிகளின் அடிப்படையில், இங்கு ஏனைய தகவல்கள் பொருண்மையான முறையில் தவறாக காட்டப்பட்டுள்ளதாக என்னால் அவதானிக்கப்படுமாயின், அவ் விடயம் குறித்து என்னால் அறிக்கையிடப்படுதல் வேண்டும். இது குறித்து அறிக்கையிடுவதற்கு எனக்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் ஆளுகை தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளின் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத்தனம் வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்ள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

.....

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு ஆணைக்குழு முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு சபையின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட

ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

சட்டவிதிகள்/ பணிப்புரைகளுக்கான குறிப்பு	அவதானிப்புகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை நிதி ஒழுங்குவிதி 65(1)	நிதி ஒழுங்குவிதியின் படி ஒதுக்கப்பட்ட குறித்த பணிகள் மற்றும் நிதி பெறுமானங்கள் உரிய அதிகாரிகளின் அதிகாரம் இன்றி மாற்றாமல் இருந்த போதிலும், மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூ. 8,990,978 பெறுமதியான தொகை எந்தவொரு அனுமதியும் இன்றி மீண்டெழும் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் பந்தியில் 13.3 ஆம் பந்தி	நிரந்தர நியமனமொன்றை செய்யும் வரை தற்காலிக தீர்வொன்றாக சேவைக்கு பதிலாள் ஒருவரை நியமிக்க முடியும். பதவியின் சேவைக்கு முழு நேர உத்தியோகத்தர் ஒருவர் அவசியமாயின், நிரந்தர நியமனத்தை தாமதமின்றி செய்ய வேண்டி இருந்தாலும், நிறுவனத்தின் 09 உத்தியோகத்தர்களுக்கு 08 மாதங்கள் தொடக்கம் 03 வருடங்கள் வரையான கால இடைவெளியைக் குறிப்பிட்டு பதிலாள் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.
(இ) சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் (i) 2018 ஆம் ஆண்டு சனவரி 24 ஆந் திகதிய 02/2018 இலக்கங் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 6.1 ஆம் பந்தி	ஒவ்வொரு உத்தியோகத்தர் குழுவுக்காகவும் அடையாளப்படுத்தப்பட்ட இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சிக் காலத்தை உள்ளடக்குமாறு மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும். அதன் பிரகாரம் பயிற்சிக்

		கொள்கையொன்றை தயாரித்து அமுலாக்குவதற்கு பதிலாக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட ரீதியில் அமையுமாறு பணிப்பாளரின் அங்கீகாரத்திற்கு அமைய 10 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான பட்டப்பின் படிப்பு மற்றும் ஏனைய கற்கைநெறிகளுக்காக ரூ. 1,338,537 பெறுமதியான தொகை மீள்நிரப்பல் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அக்கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்ததாக எந்தவொரு ஆதாரமும் பெறப்பட்டிருக்க வில்லை.
(ii)	2021 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆந் திகதி 01/2021 ஆம் இலக்கங் கொண்ட அரசாங்க வணிக சுற்றறிக்கை	மீளாய்வாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளரிடம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும், 05 மாதங்கள் தாமதமாக அதிகார சபையினால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், உற்பத்திதிறன் மிக்கதாகவும் குறித்த காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகையை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என்றும்,

பெறுகை வழிகாட்டி கோவையின் 4.3 ஆம் பந்திக்கு மற்றும் 5.3.1 (ஈ), 4.1.1 (இ) பிரிவுகளுக்கு மாறாகவும், பெறுகை வழிகாட்டி கோவையின் நோக்கத்திற்கு அப்பால் வெளிப்படைத்தன்மையின்றி ஒரே உரிமையாளருக்குச் சொந்தமான இரண்டு பெயர்களைக் கொண்ட வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இரண்டு நிறுவனங்களை தெரிவு செய்து 2020 ஆம் ஆண்டு உலக இளைஞர்களின் திறன்கள் தினத்தைக் கொண்டாடும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 1,032,930 தொகையானது செலவிடப்பட்டிருந்தது.

2.3 **ஏனைய விடயங்கள்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவிற்கு சொந்தமல்லாத மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு மாறாக பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரசபைக்கு பணிப்பாளர் பதவியொன்றுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அதிகாரசபையின் நோக்கத்திற்கு அப்பால் பணிகளை நிறைவேற்றிய உத்தியோகத்தர் ஒருவரிடம் 2021 ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ரூ. 2,106,740 தொகையானது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் தொலைபேசி சேவை நிறுவனமொன்றிடம் இருந்து முறையாக 450 மற்றும் 500 டெப் இயந்திரங்கள் பெறப்பட்டிருந்ததோடு, எந்தவொரு அங்கீகாரமும் கொள்கையும் இன்றி அதிகாரசபையின் பல்வேறு பதவிகளைக் கொண்ட உத்தியோகத்தர்களுக்காக அவ் டெப் இயந்திரங்களுடன் சிம் அட்டைகளும் விநியோகிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே சேவையிலிருந்து விலகிய 35 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த டெப் இயந்திரங்களையும் மீளப் பெறுவதற்கு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூ. 100,724,147 தொகையானது பெறவேண்டியவைகள் மீதியில் 01ஆம் வருடத்திலிருந்து 16 வருடங்களுக்கு இடையில் அறவிடப்படாமல் இருந்த ரூ. 36,312,338 தொகையானது பல்வேறு கடன்பட்டோர்கள் மீதியிலும், ரூ. 1,116,983 தொகையானது ஊழியர் கடனிலும் உள்ளடக்கப்பட்டிருந்ததோடு, இம்மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்து நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2021 ஆம் ஆண்டின் நிதி நிலைமை கூற்றின் ரூ. 198,247,374 பெறுமதியான தொகை செலுத்தப்பட வேண்டிய மீதியில் 02 ஆம் வருடத்திலிருந்து 14 ஆம் வருடத்திற்கிடையில் செலுத்தப்பட வேண்டிய முற்பணங்கள், வைப்புகள் மற்றும் பல்வேறு கடன்பட்டோர்களின் தொகை ரூ. 83,517,427 பெறுமதியாக இருந்ததோடு, அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையின் அடிப்படை இலக்கினை அடைவதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது, 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆண்டுகளுக்கான பயிலுநர்களுக்கு பயிற்சியளித்தலை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் முறையாக நூற்றுக்கு 37 மற்றும் நூற்றுக்கு 12 மாத்திரமே அடையபெற்றிருந்தத போதும், பயிலுநர்கள் விலகிச் சென்றமை முறையாக 5119 மற்றும் 2301 இற்குமிடையில் வருடாந்த ஆட்சேர்ப்புக்களில்

நூற்றுக்கு 42 பயிலுநர் எண்ணிக்கைக்காக மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) அரச கொள்கைக்கு அமைய 2020 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்பட்டிருந்த 100,000 திறனாளர்களைக் கொண்ட பல்நோக்கு செயலணியை ஸ்தாபிக்கும் கருத்திட்டத்திற்காக சனாதிபதி அலுவலகத்தின் ஒதுக்கீடுகளின் கீழ் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையாக ரூ. 12,470,721 தொகை மற்றும் ரூ. 51,944,364 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூ. 4,650,800 தொகை செலவிடப்பட்டு தகவல்களை திரட்டுதலுக்காக வேறான கணனி முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையில் குறித்த கருத்திட்டமானது நடாத்தப்படும் நிலைமையில் இருக்காததோடு, இக் கற்கைநெறியில் பயிற்சி பெற்ற பயிற்சி பெறுநர்களுக்கான 32505 சான்றிதழ்கள் வழங்கப்படாமல் அதிகாரசபையில் வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிலுவை ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கான செலுத்தப்பட்ட ரூ. 82,437,195 பெறுமதியான தொகையும் மிகைக்கட்டணங்கள் மற்றும் ஊழியர்களிடம் அறவிட வேண்டிய ரூ. 58,908,280 பெறுமதியான தொகையும் உரிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு பதிலாக கடந்த ஆண்டில் செலவாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி